## 15.6.84

**1**984 ஜுன் 15ம் திகதி காரைநகர் கடற்படை முகாமிலிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ள பருத்தியடைப்பு என்ற கிராமத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கடல் விமானத்தை விடுதலைப்புலிகள் தீயிட்டு நாசமாக்கினர். ஸ்ரீலங்காவின் கடற்படை கமாண்டர் அசோகா டி சில்வா இந்த விமானத்திலேயே நான்கு தினங்களுக்கு முன்னர் யாழ்ப் பாணத்திற்கு விஜயம் செய்திருந்தார்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

விமானம் நிறுத்தப்பட்டிருந்த இடத்தில் சடுதியாக நுழைந்த விடுதலைப்புலிகள் விமானத்திற்குக் காவல் நின்றவர்களை அச்சுறுத்தி விமானத்திற்குத் தீவைத்தனர். விமானத்தின் பெற்றோல் டாங்கியில் தீப் பற்றியபோது ஏற்பட்ட பெரும் வெடிச்சத்தம் காரைநகர் கடற்படை முகாமிற்குக்கூடக் கேட்டது. ●

தகர்க்கப்பட்ட கடல் விமானம்.



**கடல் விமானம் தகர்க்கப்பட்டது**